[2004 ஜூலை 31

120—

நினைவாலயம்

***23322—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்டத் தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த இடத்தில் நினைவாலயம் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த இடத்தில் நினைவாலயம் கட்டும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,

பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்,

விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்

சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!"

என்றார் மகாகவி பாரதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு என்ன, அவையிலே ஒரே கவிதை மழையாக இருக்கிறது?

திரு. கு. அன்பழகன்: யாருக்காக இந்த வைர வரியைப் பாடினார் என்றால், சுதந்திரப் போராட்ட வீரர், அரசியல் ஞானி, தியாகச் செம்மல், அரசியல் விற்பன்னர் என்று சொல்லக்கூடிய சுப்பிரமணிய சிவாவுக்காக மகாகவி பாரதி அவர்கள் பாடினார்கள். இந்தக் கருத்தை மையமாக வைத்து பாரதிதாசன் அவர்கள்,

2004 ஜூலை 31]

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எனை
மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை"

என்று பாடினார்கள்.

முற்பகல் 11-25

அந்தக் காலத்திலே அருஞ்சிறை, வெஞ்சிறை, கொடுஞ்சிறை என்று சிறை வாசங்கள் இருந்தன. நம்முடைய சுதேசிக் கப்பலோட்டிய வ.உ.சி. அவர்களும், சுப்பிரமணிய சிவா அவர்களும் தீவாந்தர தண்டனை பெற்றவர்கள். அப்படிப்பட்ட அருஞ்சிறையிலே அடைக்கப்பட்டு, ஆசாரம் கொடி கட்டிப் பறந்த காலத்தில் உயர்மிகு வகுப்பில் தோன்றினாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வீட்டில் வசித்த அந்தச் சமதர்மத் தெய்வம் சுப்பிரமணிய சிவா அவர்கள் சிறைச்சாலையிலிருந்தபோது slow poison மூலமாக, கொஞ்சங்கொஞ்சமாக அவருடைய உடலிலே தொழுநோயைப் புகுத்தி, வெளியே வருகின்றபோது ஒரு தொழுநோயாளியாக வந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பழகன், அதை ஒரு நல்ல கருத்தரங்கம் போட்டு வைத்துக்கொள்ளலாம். என்ன வேண்டும்? கேள்வி என்ன, சொல்லுங்கள்.

திரு. கு. அன்பழகன்: அப்படிப்பட்டவர், என்னுடைய வத்தலகுண்டிலே வாழ்ந்தவர், எங்கள் வத்தலகுண்டு பகுதியிலே இருந்துதான் இப்படிப்பட்ட தீரச் செயல்களையெல்லாம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டு மனை இப்போது பார்ப்பதற்கு அலங்கோலமாக இருக்கிறது. ஆகவே, இந்தியச் சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட தியாகி சுப்பிரமணிய சிவாவிற்கு நம்முடைய தங்கத் தலைவி, தன்னிகரில்லாத் தலைவி, தானைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அங்கே ஒரு நினைவாலயம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள் பிறந்த இடத்தில் நினைவாலயம் கட்டுவதற்கு இப்போது வாய்ப்பு இல்லை. இருப்பினும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுடைய சமாதி அமைந்துள்ள இடம்,

மருத்துவத் துறையிலிருந்து செய்தி மற்றும் சுற்றுலாத் துறைக்கு தற்போதுதான் மாற்றப்பட்டுள்ளது. சமாதி அமைந்துள்ள இடத்தை மேம்படுத்தும் வகையிலே ரூபாய் 2 இலட்சம் நிதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஒதுக்கீடு செய்து, இந்த நிதியைக் கொண்டு சமாதி அமைந்துள்ள இடத்தில் சுற்று மதில்சுவர் எழுப்பி, நுழைவு வாயில், ஆர்ச் மற்றும் கேட் அமைத்தல், மின் விளக்கு வசதி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை பொதுப் பணித் துறையின் மூலமாக மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப் பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 13, 14, 15, 16, 17 மற்றும் 18— இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)@

(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 19— இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)@@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஒன்றியங்களின் வனப் பகுதியிலுள்ள ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, திரு. கே.வி. முரளிதரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. முரளிதரன்.

@ 225 முதல் 952 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

@@ 953 முதல் 1024 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.